**விசேட அறிவிப்பு**

**<u>2023.09.01 தேதியிட்ட 2348 இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி, வடமேல் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 வகுப்பின் I (அ) தரத்திற்கு மாவட்ட அடிப்படையாகக் கொண்டு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தலின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களில் மீதி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முக பரீட்சை - 2024.04.16</u>**

2023.09.01 தேதியிட்ட 2348 இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி, வடமேல் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 வகுப்பின் I (அ) தரத்திற்கு மாவட்ட அடிப்படையாகக் கொண்டு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தலின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களில் மீதி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முக பரீட்சை 2024.04.16 அன்று வடமேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வளாகத்தில் நடைபெறும்.

02. அதன்படி, பின்வரும் பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு 2024.04.16 அன்று காலை 9.30 மணிக்கு, பின்வரும் ஆவணங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகள் (02 Sets) கொண்டு, வடமேல் மாகாண பொது சேவை அனைக்குழிவிற்கு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஏற்கனவே அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதம் கிடைக்காவிட்டாலும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.**

I. ஆட்பதிவு திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
II. பிறப்பு சான்றிதழ்
III. க.பொ.த சாதாரணதரப் பரீட்சை சான்றிதழ்.
IV. க.பொ.த உயர்தர பரீட்சை சான்றிதழ்
V. பட்டதாரி சான்றிதழ்
VI. செல்லுபடியாகும் தேதி மற்றும் விடயங்கள் குறிப்பிடப்பட்ட விளக்கமான பட்டதாரி சான்றிதழ் **(பெற்ற வகுப்பிற்கு மதிப்பெண்கள் வழங்கப்படுவதால், இந்த சான்றிதழை பின்னர் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படாது)**
VII. பதிவை உறுதி செய்வதற்காக கிராம அலுவலர் வழங்கிய DS4 சான்றிதழ். (விண்ணப்பதாரர் அந்த பிரிவில் 03 வருடங்களாக வசித்து வருவதை நிரூபிக்க வேண்டும். DS4 சான்றிதழ் மூலம் 03 வருட பதிவை நிரூபிக்க முடியாத பட்சத்தில், கணவன்/மனைவி வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருந்தால், அவரின் பதிவு சான்றிதழும் திருமண சான்றிதழும் மூலம், அல்லது விண்ணப்பதாரர் வடமேல் மாகாணத்தில் உள்ள மற்றொரு கிராம அலுவலக பிரிவொன்றில் வசித்தவர் என்றால், முந்தைய பதிவை விட்டு வெளியேறியது குறித்து சம்பந்தப்பட்ட கிராம அலுவலரின் கடிதம் மூலம் 03 வருட பதிவை நிரூபிக்கலாம்.
VIII. பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் கல்விச் சான்றிதழ்களில் பெயர் வேறுபாடுகள் இருப்பின் உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

03. வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் 8.4 (ஆ) அத்தியாயத்தின் படி இந்த நேர்முக பரிட்சையில் கீழ் வரும் சான்றிதழ்களை புள்ளிகளை வழங்குவதால், அச்சான்றிதழ்களின் <u>மூலப் பிரதிகளும்</u> (Originals), தங்களால் உறுதி செய்யப்பட்ட பிரதிகளும் <u>( 02 Sets) படி</u> கொண்டுவர வேண்டும். <u>இந்த சான்றிதழ்களை வேறொரு நாளில் சமர்ப்பிக்க அனுமதி இல்லை.</u>

I. "தகம் பாடசாலை" இறுதி சான்றிதழ் அல்லது பிற மதத்தினருக்கான அதற்கு சமமான தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
II. விளையாட்டு, கலை சார்ந்த இணைப்பாட செயல்பாடுகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மட்டத்தில் முதல், இரண்டாம், மூன்றாம் இடங்கள் பெற்ற சான்றிதழ்கள்.

குறிப்பு -

**மேலே குறிப்பிடப்பட்டவை தவிர மற்ற சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படாது.**

04. இந்த நேர்முக பரீட்சையில் பங்குபற்றுவது அடுத்த நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கான அல்லது நியமனம் பெறுவதற்கான ஒரு தகுதி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஈ.எம்.பி. ஏக்கநாயக**
செயலாளர்,
வடமேல் மாகாண பொது சேவை ஆணைக்குழு